புறநானூற்றின் இயல்பும் உயர்வும்: இயன்மொழித் துறைப் பாடல்களின் வழியான கண்டடைதலும் மறுவாசிப்பும்

தருமராசா அஜந்தகுமார்,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆய்வுச்சுருக்கம்

பண்டைத் தமிழர்களின் வரலாற்றை அறிவதற்கான கருவியாய், சங்கத் தொகை நூல்களில் ஒன்றான புறநானூறும் விளங்குகின்றது. புறநானூற்றில் 63 துறைகளில் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அத்துறைகளில் ஒன்றாக விளங்குவதே இயன்மொழி ஆகும். அதிக பாடல்களைக் கொண்ட இத்துறைப்பாடல்களின் ஊடாக இயல்பை வெளிக்கொணர்வதில் புறநானூற்றின் வகிபாகத்தை மதிப்பீடு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய வற்றின் விளக்கத்திற்கு அமைவானதாகவும் தற்காலப் பார்வைக்கு ஏற்றவாறும் எவ் வாறு இயன்மொழித் துறைப்பாடல்கள் அமைகின்றன என்ற கேள்விக்கான ஆராய்வே இக்கட்டுரை ஆகும். இயன்மொழி என்ற பெயரைத்தாண்டி மிகையுணர்ச்சி கள் வெளிப்பட்டு நின்றாலும் அவற்றில் இயல்பும், வரலாறும், தொடர்ச்சியும், பண் பாட்டுப்பதிவும் திரண்டிருப்பதற்கான சான்றுகளை எளிமையாக இனங்காணமுடி கின்றது. ஏனைய தொகை நூல்களின் செய்திகளுடன் ஒத்துப்போவதையும், ஏனைய துறைப் பாடல்களுடன் ஒத்துப்போவதையும் காணும் போது இவ்விலக்கியத்தின் நம் பகத்தன்மையை உறுதிசெய்யமுடிகின்றது. இவ்ஆய்வானது விவரண ஆய்வாகவும், பகுப்பாய்வாகவும் அமைகின்றது.

திறவுச் சொற்கள் : இயன்மொழி, பண்பாடு, மறுவாசிப்பு, வரலாறு.

1.0 அறிமுகம்

சங்க இலக்கியங்கள் தொகையும் பாட்டுமாக வகைப்படுத்தப்படுகின்றன. இந்தத் தொகைகளுக்குள் தமிழர் தம் மரபினையும் வரலாற்றையும் ஆவணமாகத் தந்து நிற்கும் இலக்கியமே புறநானூறு ஆகும். புறநானூறு யாரால் தொகுக்கப்பட்டது தொகுப் பிக்கப்பட்டது என்ற தகவல்கள் இல்லாத போதும் ஒவ்வொரு பாடலுக்கும் உள்ள திணை, துறை குறிப்புகளும் இடையிடையே காணப்படும் குறிப்புத்தொடர்களும்

அத்தொகை இலக்கியத்தின்பால் ஈர்க்கின்றன. அந்த இலக்கியம் தொகுக்கப்பட்டதில் ஒரு தொடர்ச்சியும் ஒருங்கும் காணப்படுவதைக் கூர்ந்து ஆராயும்போது கவனிக்கலாம். தமிழர் தம் இனவரைவியலை, வரலாற்றை புறநானூற்றின் ஊடாக கண்டெடுத்து கண்டெடுத்து எத்த னையோ ஆய்வுகள் நிறை வேறிவிட்டன. அவற்றை நுண்நிலையில் ஆராயும் போது அவற்றைத் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்துவதும் மறுவாசிப்புக்கு உட்படுத்துவதும் விஞ்ஞானரீதி யான அணுகுமுறையாக அமையும். பருநிலை ஆய்வுகள் பொதுமுடிவுகளை நோக்கிச் சென்று தேங்கிவிடுவதனால் புறநானூற் றுப்பாடல்களை அவற்றின் துறைரீதியாக ஆய்வுக்கு உட்படுத்து வது சாலச்சிறந்த வழியாகும். புற நானூற்றின் திணை, துறைக் குறிப்புகள் தொல்காப்பியத்தை விட புறப்பொருள் வெண்பா மாலையை அடிப்படையாகக் கொண்டு அதிகம் அமைந்துள்ளமை யைக் காணலாம். ஆனால் இத்திணை, துறைக் குறிப்புகளை அளித்தவர் புறப்பொருள் வெண்பா மாலையை மட்டுமன்றிப் பாடலின் பொருண்மையை யும் கவனத்திற்கொண்டு புதிய துறைகளை அளித்துள்ளனர். (பழிச்சுதல் - 83, 85) அரசர், சிற்றரசர் என்ற படிநிலை அமைப்பிலும், பாடப்பட்ட வர், பாடியவர், திணை, துறைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தொடர்ச்சிக்குரிய இயல்புகள் பேணப்பட்டிருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக பொருண்மொழிக்காஞ்சிப் பாடல்கள், கையறுநிலைப்பாடல்கள் ஆகியவற்றை எடுத்துக் கூறலாம்.

புறநானூற்றில் 63 துறைகளில் பாடல்கள் பாடப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. அத்துறை களில் இயன்மொழி (55), கையறுநிலை(41), அரசவாகை (35), மகட்பாட்காஞ்சி(20) பரிசில்துறை(17), பரிசில்கடாஅநிலை(17), பொருண்மொழிக்காஞ்சி(17) ஆற்றுப்படை (14 பாண் ஆற்றுப்படை - 07, புலவர் ஆற்றுப்படை - 03, விறலியாற்றுப்படை - 04) ஆகிய துறைகளிலே அதிகளவான பாடல்கள் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. அரசனின் இயல்பையும், கொடையையும் பாடுவதும் தம் கொடைபெறும் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதுமே பெரும் பாலான துறைகளின் நோக்கம் ஆகும். தாம் ஒன்றைப் பெறுவதற்காக அல்லது அரசனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பை வலுவாக்கு வதற்குமான இப்பாடல்களில் யதார்த்தம் என்பதும் வரலாறு என்பதும் எவ்வளவு ஆழமாக இருக்கும் என்ற கேள்வி எழுவது இயல்பானதே. ஆகவே இவற்றில் ஒரு துறையை அடிப்படையாகக் கொண்டு ஒரு மறுவாசிப்பாகவும் வரலாற்றைக் கண் டடைதலாகவும் அமைவதே இவ் ஆய்வு ஆகும். இந்தவகையில் புறநானூற்றில் அதிக பாடல் களைக் கொண்டதாகவும் பெயரிலேயே இயல்பு என்பதைத் தாங்கியிருப்பதுமான இயன்மொழித் துறையின் ஊடாக அப்பாடல்களின் இயல்பையும் உண்மையையும் கண்டடைவது இன்னும் சுவாரசியமானதும் பொருத்தமானதும் ஆகும்.

1.1 இயன்மொழி ஓர் அறிமுகம்

தானே முன்வந்து ஒருவனின் இயல்புகளைப் பாடுவது என்பதே இயன்மொழி என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

"அடுத்து ஊர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்து" (தொல்.பொருள்)

இதன் வளர்ச்சியாக புறப்பொருள் வெண்பாமாலையானது இவர் எமக்கு இது கொடுத்தார் அதுபோல் எமக்கு நீயும் கொடு என்று இன்னொரு அரசனிடம் வேண்டுவதாக அமைதல், மன்ன வனின் இயல்பை மொழிதல் என்று இரண்டு வகைகளைக் கூறுகின்றது.

"இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல அவை எமக்கு ஈகு என
என்னோரும் அறிய எடுத்து உரைத்தன்று" (புறப்பொருள் வெண்பாமாலை)
"மயலறு சீர்த்திமான் தேர் மன்னவன்

இயல்பே மொழியினும் அத்துறை ஆகும்" (புறப்பொருள் வெண்பாமாலை)

1.2 இயன்மொழித் துறைப்பாடல்கள்

புறநானூற்றிலே 55 பாடல்கள் இத்துறை சார்ந்து இடம்பெற்றுள்ளன. இவற்றிலே 49 பாடல்கள் தனியே இத்துறை சார்ந்தனவாகவும் 8 (பூவைநிலை இயன்மொழியுமாம்) 17 (அரச வாகை இயன் மொழியுமாம்) 128 (வாழ்த்து இயன்மொழியுமாம்) 137 (இயன்மொழி பரிசில் துறையுமாம்) 168 (பரிசில்துறை: இயன்மொழியும் அரசவாகையுமாம்) ஆகியன விகற்பத்துறை களாகவும் அமைந்துள்ளன. 158 ஆவது பாடல் வாழ்த்தியல் பரிசில் கடாநிலையுமாம் என்று அமைந்திருந்தபோதும் தொல்காப்பியம் புறத்திணையியல் 35 ஆவது சூத்திரத்திற்கு உரை கண்ட நச்சினார்க்கினியார்,

"இன்னோர் போல் எமக்கு ஈயென்ற இயன்மொழி வாழ்த்து இது" (தொல்.பொருள்) என்று இப்பாடலை இயன்மொழி வாழ்த்திற்குள் சேர்க்கின்றார்.

1.3 பாடியவர்களும் பாடப்பட்டவர்களும்

இயன்மொழித்துறையிலே 24 புலவர்கள் 27 அரசர்களை, சிற்றரசர்களை, படைத் தலைவர்களை, புரவலர்களைப் பாடியுள்ளமையைக் காணமுடிகின்றது. இவற்றில் 173 ஆம் பாடலில், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற அரசன் புரவலனாகிய சிறுகுடி கிழான் பண்ணனையும் 215, 216 ஆகிய இருபாடல்களில் கோப்பெருஞ்சோழன் என்ற மன்னன் பிசிராந் தையார் என்ற புலவரைப் பாடும் புறநடையையும் காணமுடிகின்றது. இயன்மொழியில் அதிக பாடல்களைப் (8) பாடிய புலவராகக் கபிலர் விளங்குகின்றார். (8, 14, 106, 107, 108, 122, 123, 124) அதிகம் பாடப்பட்டவனாக ஆய் அண்டிரன் விளங்குகின்றான். (128, 129, 130, 131, 132, 134) இவனைத் தவிர பாரி(3), சேரமான் கடுங்கோ(3), மலையமான் திருமுடிக்காரி(3), நலங் கிள்ளி (3), அதியமான் (3), பிட் டங்கொற்றன் (3) ஆகியோர் அதிகம் பாடல்பெற்றிருப்பதைக் காணலாம். கடையேழு வள்ளல்களின் கொடைத்திறமும் வரலாறாக இங்கே பதிவு செய்யப்பட் டுள்ளதைக் குறிப்பிடலாம்.

1.4 புரவலர் - புலவர் தொடர்பு

அரசனிடம் இருந்த பொருளும் புலவனிடம் இருந்த புகழ்மொழிகளும் அரசர் புலவர் தொடர்புக்கான அடிப்படைகளாக அமைந்தன. புலவனின் புலமை எல்லாம், புரவலரின் நாடு, படை, கொடை, இயல்பு என்பவற்றைப் பாடுவதிலேயே கழிந்தமையைப் பாடல்கள் புலப்படுத்து கின்றன.

பசிப்பகையோடு போராடிக்கொண்டிருந்த புலவனுக்கு அவற்றை விரட்டுவதற்கு நூலறிவே கையாகவும் தம் செந்நாவே மருப்பாகவும் விளங்கியது என்று மள்ளனார் என்ற புலவர், புலவர் களின் இயல்பினைப் பாடுகின்றார். தமக்குப் பொருள் தந்த புரவலனை ஒவ்வொரு நாளும் நன்றிக் கடனாய்ப் பாடுவேன் என்கின்றார். (புறநானூறு:388)

அரசர் புலவர் உறவு என்பது இரப்பதனாலும் கொடுப்பதனாலும் மட்டும் இருக்கவில்லை. அரசின் திறமை பற்றிய ஈர்ப்பும் புலவனின் புலமை பற்றிய ஈர்ப்பும் இருவரின் பிணைப்புக்கு வழிசெய்திருந்தமைக்கும் இயன்மொழியில் சான்றினைக் காணமுடிகின்றது. காணாமலேயே பொருள் கேட்காமலும் கொடுக்காமலுமே தூய்மையான நட்பு கோப்பெருஞ்சோழனுக்கும் பிசி ராந்தையாருக்கும் இடையில் நிலவி இருந்திருக்கின்றது,

பிசிராந்தையர், அன்னச்சேவலுக்குச் சொல்கின்றார் 'நீ அவனிடம் சென்று அவன் காதுக் குள் எனது பெயரைச் சொன்னால் உன் பெடைக்குத் தேவையான ஆபரணங்களை அவன் தரு

வான்' (புறநானூறு:67)

இதுவரை காணாத உள்ளத்தால் பிணைக்கப்பட்ட தமது நட்பினனாகிய பிசிராந்தையர் தன்னோடு வடக்கிருந்து உயிர்துறப்பான் என்று சான்றோர் முன்னிலையில் கோப்பெருஞ் சோழன் கூறுகின்றான்(புறநானூறு:215)

பொத்தியாருக்கும் கோப்பெருஞ்சோழனுக்கும் உள்ள தொடர்பினையும் தனக்கும் அவனுக்கும் உள்ள அன்பினையும் இயல்பாகவே எடுத்துக்காட்டுகின்றார் பிசிராந்தையர் (புறநானூறு:212)

பிசிராந்தையர் கோப்பெருஞ்சோழனின் மீதுள்ள அன்பு மிகுதியால் தனது பெயரை "பேதைச் சோழன்" என்று சொல்லும் அளவிற்கு ஆழமான காதல் போன்ற அன்புநிலை காணப் பட்டிருக்கின்றது. (புறநானூறு:216)

இவர்கள் இருவரும் வடக்கிருந்து இறந்த பிறகு பொத்தியார், கண்ணாகனார், பூதநாதனார் ஆகிய புலவர்கள் பாடுகின்ற கையறுநிலைப்பாடல்கள் இவற்றின் உண்மைத்தன்மையை எமக்கு வெளிப்படுத்துகின்றன. 215 - 223 பாடல்கள் இவை தொடர்பான, தொடர்ச்சியான பாடல் களே ஆகும். அரசனைப் புலவன் மட்டுமல்ல அரசனே புலவனைப் பாடுகின்ற சூழலும் யதார்த் தத்தை இயல்பைப் பாடுகின்றனவாகவே அமைவதை எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் பொருள் - புகழ் பரிவர்த் தனைக்கு அப்பால் நட்பு ஆழமாகியிருப்பதைக் குறிப்பிடவேண்டும்.

1.5 அரசர் மீதான எதிர்ப்புக்குரல்

இயன்மொழி வாழ்த்து இயல்பானது என்றால் அரசர் புலவர் உறவில் இருக்கும் விரிசல்களும் வெளிப்பட்டிருக்கின்றதா என்ற கேள்விக்கு புறநானூற்றின் 151 ஆவது பாடல் பதி லளித்து ஆறுதல் தருகின்றது. பெருந்தலைச்சாத்தனார் என்ற புலவர் கண்டீரக்கோவும் இளவிச் சிக்கோவும் ஒருங்கு இருந்த இடத்தில் கண்டீரக்கோவை மட்டும் தழுவித் தன் நட்பை வெளிப் படுத்துகின்றார். இளவிச்சிக் கோவைத் தழுவாமைக்குக் காரணத்தை அவனிடமே நேருக்குநேர் தெரிவிப்பதுதான் இப்பாடல். பெண் கொலை புரிந்த நன்னன் மரபினன் என்பதற்காகவும் இர வலர்க்கு வாயில் அடைத்தவன் என்பதற்காகவும் உன்னைத் தழுவவில்லை என்று சொல்கின் றார் புலவர்.

"பொலந்தேர் நன்னன் மருகன் அன்றியும் நீயும்
முயங்கற்கு ஒத்தனை மன்னே: வயங்கு மொழிப்
பாடுநர்க்கு அடைத்த கதவின்..."(புறநானூறு:151)

இதன் மூலம் பெண்கொடுமைக்கு எதிரான குரலையும், புலவனுக்கு மதிப்பளிக்காமை தொடர்பான எதிர்ப்பையும் புலவர் பதிவு செய்துள்ளார். நன்னன் என்பவன் பெண்கொலை புரிந்த வன் என்பதற்கான பதிவினை குறுந்தொகையின் 292 ஆவது பாடலில் காணலாம்.

"பெண்கொலை புரிந்த நன்னன் போல"(குறுந்தொகை:292)

இவ்வாறு அரசர் புலவர் உறவில் ஓர் இயல்பினைப் பாடல்களில் காணமுடிகின்றது.

1.7 புரவலரின் இயல்புகள்

அரசர்களையும் சிற்றரசர்களையும் புரவலர்களையும் புலவரையும் பாடுவதாக அமைந்த இயன்மொழித்துறைப் பாடல்களில் அவர்களின் பல்வேறு இயல்புகளைப் புலவர்கள் பாடியுள்ளார் கள். நாட்டுவளம், கொடை இயல்பு, கொடைப்பொருள்களின் சிறப்புகள், வீரம், போர் அறம், அடக் கம், மானம், நட்பு, இரக்கம், வலிமை எனப் பல விடயங்களைப் பாடியுள்ளார்கள். அவற்றிற்கு இடையில் பல ஒற்றுமைகளும், தொடர்ச்சிகளும், வரலாறுகளும், பண்பாடுகளும் பிணைந்திருப்

பதைக் காணமுடிகின்றது. அதே நேரத்தில் அவற்றில் காணப்படும் சில மிகைகளும், அதிக புகழ்ச்சிகளும் மறுவாசிப்பையும் கோரிநிற்பதைத் தவிர்க்கமுடியாது.

1.7.1 கொடைத்திறம்

புலவர்கள் பொருள்களைப் பெறும் நோக்கத்திற்காகப் பாடுவதும் இயன்மொழியின் ஒரு வகையாகும். அந்தவகையில் புரவலரின் கொடை இயல்புகளை எடுத்துரைத்தலைக் காணமுடி கின்றது. யானோ தஞ்சம் என்று கூறியபடியும் (34) எய்த வந்தனம் யாம் ஏத்துக பலவே(10), பாடுகம் வம்மினோ பரிசில் மாக்கள் (32) என்று ஒன்றுதிரண்டு வந்தபோது கொடை வழங்கு வதில் சலிப்பற்றவர்களாகவும், எந்தவேளையிலும் கொடைவழங்குபவர்களாகவும், கொடை வழங்குவதில் அறியாமை உடையவர்களாகவும், யாருக்கும் கொடை வழங்குபவர்களாகவும், கொடை வழங்கு வதில் தன் பெயரோ ஊரையோ வெளிப்படுத்தாதவர்களாகவும், குறிப்பிட்ட காலத் திற்கே போதுமான அளவு கொடை வழங்கியவர்களாகவும், மாரி போல் கொடை வழங்கு பவர்களாகவும் விளங்கி யிருந்திருக்கின்றார்கள்.

பாணர்களுக்குப் பொற்றாமரையும் புலவர்களுக்குத் தேரும் யானையும்(12) சோறும்(108) தேரும் (123), மான்கறியும் சோறும்(177), யானைகளும்(129, 130, 131), புத்தாடை, வெண் கலத்தில் ஊன்சுவைச் சோறும் கள்ளும் செந்நெல்களும்(153) என்று அரிய பெரிய கொடையில் இருந்து உணவு உடை வரை வரையறை இல்லாமல் கொடை வழங்கிய செய்திகளைப் புலவர்கள் பாடியுள்ளார்கள்.

கொடைப்பொருள்களை மட்டுமல்ல அவன் தன்னையே கொடுக்கக் கூடியவன் என்றும் (108), பொருள் எல்லாம் பரிசிலர்க்கு உரியதாகவும் மனைவி மட்டுமே தனக்குரியதாகவும் கொண் டவன் என்றும் (122) அவன் கொடைத்திறத்தை மிகைப்படுத்தவும் தவறவில்லை.

கொடை பெற்று வந்தவர்கள் காலையும் மாலையும் வரகுடன் பாலைவிட்டுச் சமைத்துத் தேனுடன் கலந்தும், அத்துடன் கொழுத்த முயல் இறைச்சியைச் சேர்த்தும் தின்பர் (34) என்று கூறும் தன்மை கொடைத்திறத்தின் மேன்மையைச் சொல்வதோடு அக்காலப் பண்பாட்டு நடை முறை இயல்புகளையும் மொழிந்து நிற்பதைக் காணலாம்.

யானைகளை கொடை வழங்குவதைப் பற்றிச் சிலாகித்துச் சிலாகித்துப் பேசுகின்றார்கள் புலவர்கள். அவன் பரிசளித்த யானைகளை விண்மீன்களின் எண்ணிக்கைக்கு ஒப்பிடலாம் (129) என்றும் இவ்வாறு கொடை வழங்கும் அளவிற்கு நின் நாட்டு இளம்பிடி ஒரு சூலில் பத்து ஈனுமோ? (130) என்று அதிசயிக்கின்றார்கள். அவனிடம் உள்ள யானைப்படைகளின் எண்ணிக்கை பகை வர்கள் ஓடும் போது விட்டுச்சென்ற வேல்களின் எண்ணிக்கையை விட அதிகமாம்(130) காடுகள் பாடிப் பெற்ற யானையோ காட்டில் உள்ள யானைகள் என்றும் அதிசயிக்கத்தக்க கற்பனைகளிலும் (131) பாடிநிற்பதைக் காணலாம்.

யானை மட்டுமல்ல தேர்களையும் அதிகமாகப் பரிசளித்தார்கள். இவன் வழங்கிய தேர் களின் எண்ணிக்கை மழைத்துளிகளிலும் அதிகம் (123) என்றும் கூறுகின்றார்கள்.

இவ்வாறு வழங்கும் பொருள்களிலோ எண்ணிக்கையிலோ வரையறை இல்லாமல் இருந்தார்கள் என்பதை மிகையுணர்ச்சியுடன் இயன்மொழி என்ற எல்லையைக் கடந்து புலவர்கள் பாடியிருப்பதைக் காணமுடிகின்றது.

பேகன் மயிலுக்குப் போர்வை வழங்கிய தன்மையைப் பேதைமை மிக்கது என்று பலர் இழித்துரைத்த போது அவனின் இயல்பை எடுத்துரைக்கும் பிரக்ஞை புலவரிடம் வெளிப்பட்டது.

தேவையான இடம்தேவையற்ற இடம் என்று பாராமல் எல்லா இடமும் மழை பொழிவது போல தேவையானவர் தேவையற்றவர் என்று வேறுபாடு பாராமல் கொடை வழங்குபவன் என்றும் கொடை வழங்குவதில் அறியாமை உடையவன் என்றும் ஆனால் பகைவர் படையெடுத்து வந்தால் அறியாமையோடு பார்த்துக்கொண்டிருக்க மாட்டான் என்றும் பரணர் என்ற புலவர் கூறுகின்றார். (142)

இதே போலவே பாரியைப் போல கைமாறு கருதாமல் கொடுக்கக்கூடியவர்கள் யாரும் இருக்கிறார்களா? என்பதற்குக் கபிலர் தரும் பாடல் கவனத்திற்குரியது.

"பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே" (புறநானூறு:107)

இந்தக் கொடைத்திறங்களில் மயங்கித் தமது கலையை மறந்த கூத்தர்களையும் (153) தமது செயலை மறந்த உழவர்களையும் கூடப் புலவர்கள் பாட மறக்கவில்லை.

அதே போல சாதாரண ஏழைகளுக்கு புரவலர் வழங்கும் பொன் ஆபரணங்களை என்ன செய்வது என்றும், எங்கே அணிவதும் என்றும் தடுமாறுவது இயற்கை. அந்த இயற்கையை இதிகாசக்கதையுடன் இணைத்து இயன்மொழியாகக் சொல்லியுள்ள விதம் நயக்கத் தக்கது ஆகும். சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னியிடம் ஆபரணங்களைப் பரிசு பெற்ற பின் நடந்ததைப் பாடியுள்ள இயல்பையும் அதற்குள் இருக்கின்ற சுவையையும் மறக்கமுடியாது. உலகி யல் வழக்கை நாடக வழக்காக்கும் அற்புதத் தருணம் ஆகும்.

"விரல்செறி மரபின செவி தொடக்குநரும்
செவித்தொடர் மரபின விரற் செறிக்குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக்குநரும்
மிடற்றமை மரபின அரையாக் குநரும்
கடுந்தெறல் இராமன் உடன் புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதர் அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந்தாஅங்கு
அறாஅ அருநகை இனிது பெற்றிகுமே" (புறநானூறு:378)

அதேநேரத்தில் அந்தப் பொருள்கள் அவர்களுக்கு வந்துசேர்ந்த தன்மையையும் இயல் பாகப் பாடியுள்ளதையும் காணமுடிகின்றது. பகைவரின் மண்ணைக் கொடுமை செய்து அவர் களின் பொருளைக் கொண்டு எங்களுக்கு இன்பம் தருகின்றாய் (12) என்றும் புகார் நகருக்குள் புகுந்த கப்பலின் பொருள்களைப் பகிர்ந்து கொடுத்தாய் (30) என்பன சான்றுகளாக அமைகின்றன.

அதே நேரத்தில் பெண்களுக்கான சமவுரிமையை அக்காலத்தில் அரசர்கள் வழங்கியிருந் தமையைக் காணமுடிகின்றது. அரசன் அரண்மனையில் இல்லாத காலத்தில் பொருளுக்காய் ஏங்கி வரும் இரவலர்க்கு அரண்மனையில் இருக்கும் பெண்கள் கொடைப்பொருள்களை வழங் கிய செய்தியையும் காணமுடிகின்றது. (புறநானூறு: 151)

இவ்வாறு புரவலர்களின் கொடைத்திறம் என்பது பல்வேறு நுண்விடயங்களின் திரட்சியாக உருத்திரண்டு நிற்பதை இயன்மொழி வாழ்த்துப்பாடல்கள் தந்து நிற்கின்றன. இயல்பையும் அதே

நேரத்தில் மிகையுணர்ச்சியின் மீதான கேள்வியையும் ஒரே நேரத்தில் எழுப்புகின்றன.

1.7.2 ஆளுமையும் வீரமும்

கொடைத்திறம் பாடிய புலவர்கள் அரசனின் ஆளுமையையும், படைத்திறத்தையும் வீரத் தையும் பாடிநிற்பதைக் காணலாம். போர் செய்து செய்து வன்மையான கரங்கள் அவனுடை யவை. கொடை வாங்கும் எங்கள் கைகளோ மென்மையானவை (14) செய்து இரங்கா வினை உடையவன் (10) அவன் கோபத்தினால் செய்யும் செயல்கள் எல்லை கடந்தவை அதாவது தேர் ஓடிய இடத்தில் கழுதை ஓட்டியவன், கோட்டைகளை அழித்தவன், பறவைமேயும் விளைநிலங் களை தேரால் அழித்தவன், குடிக்கும் குளத்தில் யானைகளை விளையாட வைத்தவன் என்று பகைவர்க்கு இயற்றிய செயல்களை விமர்சனநோக்கோடு இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார்.(15) அதியமான் என்ற அரசனின் எல்லாப் படைக்கலங்களும் பயன்படுத்த முடியாதவாறு பழுதடைந்து விட்டன என்பதன் மூலமும் உக்கிரப் போர் ஆற்றலை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றார் புலவர் (97)

"செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்திங்களுள் வெயில் வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை ஆகலின்" (புறநானூறு:38)

என்று உயர்வுநவிற்சியாக ஆற்றலை இயன்மொழியில் பாடிநிற்கின்றார்.

இரவலர்கள் பகைவர்களுடைய நாடுகளையும் உன்னுடைய நாடு என்றே நினைக்கும் அளவிற்கு அவற்றை விரைந்து கைப்பற்றும் ஆளுமை உடையவன் என்றே பாடிநின்றனர்(38).

"மகளிர் மலைத்தல் அல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப" (புறநானூறு:10)

"ஆடுமகள் குறுகின் அல்லது
பீடுகெழு மன்னர் குறுகலோ அரிது" (புறநானூறு:128)

"ஆர்வலர் குறுகின் அல்லது காவலர்
கனவினுங் குறுகாக் கடியுடை வியனகர்" (புறநானூறு:390)

"துப்பு எதிர்ந்தோர்க்கே உள்ளாச் சேய்மையன்
நட்பு எதிர்ந்தோர்க்கே அங்கை நண்மையன்" (புறநானூறு:380)

என்று குறிப்பிடும் அளவிற்கு பெண்களாலும் நட்பினாரும் மட்டுமே அணுகக் கூடியவர்களா கவும் பகைவர்களால் அணுக முடியாதவர்களாக விளங்கிய பான்மை புலப்படுத்தப்பட்டுள்ளது.

தன்பகை மட்டுமல்ல பசிப்பகை கடிபவர்களாகவும் (400) அவர்கள் விளங்கிய தன்மை யையும் புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். முருகனைப் போன்ற ஆண்மையும் சிறுவரைப் போன்ற கபடம் அற்ற உள்ளம் உடையவர் என்றும் பாடுகின்றார்கள் (380)

இவ்வாறு ஆற்றலின் உயர்வை, வீரத்தின் சிறப்பை மட்டும் பாடுவது இயல்பா? அவர்கள் யாரும் தோல்வியே அடைந்ததில்லையா? அப்படியாயின் இவையெல்லாம் வெறும் கற்பனைப் படையல்கள் என்று ஒதுக்கிவிடும் என்பதற்கு எதிர்வினையாகவோ என்னவோ புறநானூற்றின் 17 ஆவது பாடலில் இரும்பொறை என்ற அரசன் செழியன் ஒருவனிடம் தோற்ற செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது இலக்கியத்தின் நம்பகத்தன்மையை அதிகரிக்கின்றது.

போர் ஆற்றலை மட்டுமல்ல போரின் அரசன் பின்பற்றிய அறங்களும் இத்துறைப்பாடல் களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

"ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாஅதீரும்
எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின்" (புறநானூறு:09)

அரசனின் வீரத்திற்கு அடிபணியவேண்டும். அவனுக்குத் திறை செலுத்தவேண்டும் இல்லையேல் உன் இல்லாள் உன்னை இழந்துவிடுவாள் என்று எச்சரிக்கை செய்யும் பாடல் களையும் காண முடிகின்றது (புறநானூறு:97)

1.7.3 மானமும் அடக்கமும்

ஆளுமையும் வீரமும் மட்டுமல்ல மானமும் மிகுந்திருந்ததைப் புலவர் ஒருவர் வெளிப் படுத்துகின்றார். வடதிசையிலே இமயமலையிலே கவரிமான்கள் நிற்கின்ற அதற்குச் சமனாக தென் திசை உலகின் நிறையும் மானமும் காப்பவன் நீ (132) என்று கவரிமானோடு சமனாக ஒப்பிட்டுப் பேசும் தன்மையைக் காணமுடிகின்றது. உன்னிடம் இருக்கும் வலிமையையும் அதனை மறைத்து நிற்கும் அடக்கத்தையும் யாராலும் பாடமுடியாது. அவ்வளவு சிறப்புடையவன் என்று சொல்கின்றார். ஞாயிற்றைக் கூடஅளந்தோம் என்று சொல்லலாம் ஆனால் உனது அடக்கத்தை யாராலும் அடக்கமுடியாது (30) என்று இயல்பை வியந்து நிற்கின்றார்.

1.7.4 பரம்பரையான இயல்புகள்

இயன்மொழியில் அவர்களின் இயல்பு மட்டுமல்ல அவர்களின் இயல்பு வந்த வழிகளையும் பாடிநிற்கும் திறத்தையும் காணமுடிகின்றது. புறாவிற்காக தன்னையே அரிந்துகொடுத்த சிபியின் வழி வந்த உனக்கு ஈதல் ஒரு புகழ் அன்று, உன் முன்னோர்களை நினைத்துப் பார்த்தால் வீரமும் உனக்குப் புதிது அன்று, உறையூரிலே தொன்று தொட்டே நீதியும் நிலைத்து நிற்கின்றது. ஏழு போர்களில் வென்றவனாகிய குதிரை வீரனாகிய நீ இமயத்தில் தன் பெயர் பொறித்த சேரனை வென்று அவன் வஞ்சிநாட்டைக் கைப்பற்றிய முயற்சியை என்னால் பாடமுடியாது தடுமாறு கின்றேன் (புறம்:39) என்று கிள்ளிவளவனை நப்பசலையார் என்ற புலவர் பாடிநிற்கின்றார். மரபுவழியான இயல்புகளையும் அவனின் தனித்துவமான இயல்பையும் பாடிநிற்கின்ற புலவரின் தன்மையைக் காணமுடிகின்றது.

1.7.5 நாட்டின் இயல்பும் வளமும்

புலவன் அரசனைப் பாடும்போது நாட்டின் புவியியல் அமைப்போடு சேர்த்துப் பாடுகின்ற தன்மையினைக் காணமுடிகின்றது. குமரிப் பெருந்துறையில் இருந்து வடமலைக்குச் செல்லும் இடைவழியில் சோழநாட்டின் உறையூர் இருப்பதாகப் பாடுகின்றார் பிசிராந்தையார்(புறம்:67).

"தென் குமரி, வட பெருங்கல்,
குண குட கடலா வெல்லை,
குன்று, மலை, காடு, நாடு
ஒன்று பட்டு வழி மொழியக்,
கொடிது கடிந்து, கோல் திருத்திப்,
படுவது உண்டு, பகல் ஆற்றி,
இனிது உருண்ட சுடர் நேமி
முழுது ஆண்டோர் வழி காவல!" (புறநானூறு:17)

உலகமே வரட்சியில் தவித்தாலும் நாஞ்சில் நாடு வரட்சியில் இருக்காது(புறம்: 137) ஆமை

முட்டையும் ஆம்பல் கிழங்கும் ஒன்றாகக் காணப்படும் இடம் (புறம்:176). கேழல் உழுத புழுதி யிலே விதைத்த தினையும் விளைந்து கதிர் முற்றிய நல்ல நாளிலே புதிது உண்ண விரும்பிய குறவர், மான் இறைச்சிப் புலால் நாறும் பானையைக் கழுவாதே மரையாவின் பாலை உலை நீராக்கிச் சந்தன விறகால் எரித்து அத்தினையைச் சமைத்து, அகன்ற வாழையிலையிலே பல ரோடு பகுத்துண்ணும் குதிரைமலைத் தலைவனே(புறம்:168) வண்மை அல்லது வலிமை கொண்டவே ஏனைய மலைகள். ஆனால் கொண்கானமலை இவ்விரண்டும் உடையது(புறம்:156) பலாமரத்தின் பெரிய கிளையிலே இரவலர் கட்டியிருந்த முழவினைப் பலாக்கனி போலும் என மயங்கி மந்தி தட்ட அன்னச்சேவல் சிற கடித்துப் பறக்கும் முகில் படியும் ஆயின் பொதி யின்மலை(புறம்:128) என்றெல்லாம் நாட்டின் வளத்தை, இயற்கையை இயல்பாகப் பதிவு செய்துள்ளதைக் காணலாம்

1.8 வரலாற்றுத்திரட்டு

இயன்மொழி என்பது இயல்பானது என்றால் யதார்த்த வாழ்க்கையைப் பதிவு செய்திருந்தது என்றால் அப்பாடல்கள் வரலாற்றின் பதிவுகளாகும் தகுதி உடையன ஆகும். கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் பற்றிய செய்திகளை முன்னர் நோக்கினோம். அது போலவே சிபிச்சக்கரவர்த்தி போன்ற முன் ஆண்ட சோழர்களின் வீரம், நீதி பற்றி அறிந்தோம். இதிகாசச் செய்தியைக் கூட எளிமையாகக் கையாண்டிருந்ததைக் கணலாம். இன்னொரு பாடலில் கடையேழு வள்ளல் களைப் பற்றிய குறிப்பினைக் காணமுடிகின்றது, இயல்பாக அவர்களைப் பற்றிய செய்தி எடுத் துரைக்கப்படுவதைக் காணலாம். அந்த ஏழு வள்ளல்களும் மாய்ந்துவிட்டனர். இரவலர்களைக் காக்க நீ இருக்கிறாய் என நம்பி வந்துள்ளோம் நீ கொடை வழங்கவேண்டும் என்று கூறுவதைக் காண்கின்றோம். புறப்பொருள் வெண்பாமாலை இயன்மொழிக்கு கூறிய முதலாவது இலக் கணத்திற்கு இப்பாடல் சாலப்பொருந்தி நிற்பதைக் காணலாம்.

"முரசு கடிப்ப இகுப்பவும், வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்,
கறங்கு வெள் அருவி கல் அலைத்து ஒழுகும்
பறம்பின் கோமான் பாரியும், பிறங்கு மிசைக்
கொல்வில் ஆண்ட வல்வில் ஓரியும் :
காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை, மறப்போர் மலையனும்
ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக், கொடும்பூண் எழினியும்
ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கும் நளிமுழை,
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப்,
பெருங்கல் நாடன் பேகனும்: திருந்துமொழி
மோசிபாடிய ஆயும் : ஆர்வமுற்று
உள்ளி வருநர் உலைவுநனி தீரத்,
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்,
கொள்ளார் ஓட்டிய நள்ளியும்: என ஆங்கு
எழுவர்" (புறநானூறு:158)

ஆதனுங்கனைப் போல கொடைவழங்குங்கள் என்று கூறும் இன்னொரு பாடலையும் நாம் காணமுடிகின்றது. (389)

1.9 மறுவாசிப்பிற்குரிய இடங்கள்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் தோன்றிய இலக்கியத்தில் இருந்து ஆய்வாளர்கள் அதிகம் எதிர்பார்ப்பது, வரலாறு, பண்பாடு, சமூக வாழ்வு என்பவற்றின் பதிவுகளே ஆகும். வரலாற்றின் சாட்சியமாக இலக்கியத்தை அணுகும்போது சில மறுவாசிப்புகளுக்கான தருணங்களை, நம் பகத்தன்மை பற்றிய கேள்விகளை புறநானூறும் ஏற்படுத்தி விடுகின்றது.

அரசனை வாழ்த்தும் போது பொழியும் மழைத்துளிகளிலும் அதிகமான காலம் நீ வாழ வேண்டும் (புறம் 35), ஞாயிற்றையே அளந்தாலும் அவன் வலிமையையும் அடக்கத்தையும் அளக்கமுடியாது(புறம் 30), பஃறுளி ஆற்றங்கரை மணலினும் அதிக காலம் நீ வாழவேண்டும் (புறம் 9), சூரியனே நீயும் அரசனுக்கு நிகராக முடியாது (புறம் :8), சூரியனில் குளிர்ச்சி தேவை யெனினும் நிலவிலே வெம்மை வேண்டினும் எதையும் உருவாக்கக் கூடிய ஆற்றல் பொருந்திய வன் (புறம்: 38), பெண்கள் பூச்சூடக் கேட்டால் மதுரை மாநகரையே கொடுக்கக் கூடியவன்(புறம் 32), பரிசளித்த யானைகளின் எண்ணிக்கை விண்மீனிலும் அதிகம்(புறம்:129) அரசனிடம் பாடி காடுகள் பெற்ற பரிசுகளோ காட்டிலே உள்ள யானைகள்(புறம்:131) என்றெல்லாம் இடம்பெறுவது மிகையாக அமையும் போது அவற்றின் நம்பகத்தன்மையில் கேள்வி ஏற்படுகின்றது. அதே நேரத்தில் ஒரு அரசனை இன்னொரு அரசனுடன் ஒப்பிடும்போது மிகத்தாழ்வாக ஒப்பிடுவதும் நெருடலாகும். கள்ளுண்டு இருக்கும் போது கொடை வழங்கல் எளிது. ஆனால் இவன் தெளிவாக இருக்கும் போதே கொடை வழங்குபவன் என்பது அரசர்கள் அக்காலத்தில் கள்ளுண்ட நேரத்தில் அதிக கொடைப் பொருள்களைத் தம்மையறியாமல் வழங்கியிருக்கின்றார்கள் என்ற செய்தி யையும் பதிவுசெய்கின்றது.(புறம்:123)உலகியல் வழக்கை நாடக வழக்காக மாற்றும் போதே இலக்கியம் உயிர்ப்பானதாக மாறும். இல்லையேல் வெறும் தகவல் திரட்டானதாகவே அமைந்து விடும்.

ஆனால் புறநானூற்றின் இயன்மொழித்துறைப்பாடல்களில் இயல்பு இருக்கிறதா என்ற கேள்வியுடன் ஆரம்பித்து ஒவ்வொரு பாடலையும் படிக்கும் போது அவற்றில் இயல்பும், தொடர்ச்சி யும் பேணப் பட்டிருந்ததனை அவதானிக்கமுடிந்தது. ஒரு புரவலனைப் பற்றிய பல புலவர்களின் ஒருமித்த கருத்து கள் (எ-டு கோப்பெருஞ்சோழன்), ஓர் புரவலனைப் பற்றி இன்னொரு புரவலனி டம் சொல்லும் கருத்து, அரசனையே எதிர்க்கும் துணிவு, கடையேழு வள்ளல்கள் பற்றிய பதிவு, இவ்விலக்கியத்தில் இடம்பெறும் செய்திகள் ஏனைய தொகைப்பாடல்களிலும் இடம்பெறும் தன்மை (எ-டு குறுந்தொகை 292 ஆவது பாடலில் நன்னன் செய்த பெண் கொலை), கொடைப் பொருள்களை வைத்து இரவலர்களின் குடும்பம் திணறும் தன்மைகள் இவையெல்லாம் ஒரு யதார்த்த இலக்கியத்தின் தன்மையையே காட்டிநிற்கின்றன.

1.10 முடிவுரை

புறநானூறு தமிழர் வாழ்வியலின் அரிய வரலாற்றுப் பொக்கிசம் என்பதை மறுக்கமுடியாது. இயன்மொழித்துறைப் பாடல்கள் பரிசு பெறுவதற்காகப் பாடப்பட்டன என்றாலும் பரிசு கோராத சந்தர்ப்பங்களிலும் இயல்பாகப் பாடப்பட்ட சந்தர்ப்பங்களையும் காணமுடிகின்றது. இயன்மொழி என்ற துறை, புரவலர்களின் மன இயல்புகளை வெளிப்படுத்துகின்றது. அக்கால வாழ்வியலுக்குள் இருந்த பண்பாட்டையும் வெளிப்படுத்துகின்றது. அரசன் இல்லாத போது பாடப்பட்ட கையறு நிலைப்பாடலகளுக்கும் இயன்மொழிப்பாடல்களுக்கும் உள்ள ஒற்றுமைகள் இவற்றின் உண் மைத்தன்மையை வெளிப்படுத்தப் போதுமானதாக அமைகின்றன. இத்துறைப்பாடல்களில் காணப்படும் சில மிகை யுணர்ச்சிகளைக் கொண்டு இவ்விலக்கியத்தின் வரலாற்றுத்தன்மையை நாம் குறைத்துவிடமுடியாது என்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்

* இராகவையங்கார். மு.(2018).,இலக்கியக் கட்டுரைகள், சாரதா பதிப்பகம், சென்னை.
* சண்முகம்.செ.வை(2013)., கவிதைக்கட்டமைப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
* சதீஸ்.கோ.(2016).,பண்டைத்தமிழ் பனுவல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
* சாமிநாதையர்.உ.வே.(2017), குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.
* சீனிச்சாமி.துரை(2013)., தொல்காப்பியமும் இலக்கியவியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
* துரைசாமிப்பிள்ளை.ஔவை.(1996).,புறநானூறு மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி.
* பஞ்சாங்கம்.க.(2012), புதிய கோட்பாட்டு நோக்கில் பழந்தமிழ் இலக்கியம், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.
* பழனிவேலு.கே.(2016)., சங்கக்கவிதை: மொழி - அரசியல், மாற்று வெளியீட்டகம், சென்னை.